REGISTERED No. M. 1318.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — ௧. } பிங்கள ௵ மாசி ௴ / 1918-ம் ஆண்டு பிப்ரவரி ௴ { மதி — ௫.

உள்ளுறை.

	பக்கம்.
௧. பாரி.	௪௯.
௨. பத்துப்பாட்டு.	௫௪.
௩. ஐகார வீற்றுவினைப்பகுதி.	௫௭.
௪. கம்பர் சரித்திரம்.	,,
௫. நாம் எதனை விரும்புவது?	௫௯.

பத்திராசிரியர்:— வீ. துரைசாமி முதலியார்,
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர்.
புதுவை.

வருடச் சந்தா விவரம்:

உள்ளூர்க்கு ...	ரூ [illegible]	வெளிநாட்டுக்கு ...	ரூ ௧
வெளியூர்க்கு ...	ரூ [illegible]	தனிப் பிரதி ...	அணா ௧

64

வாழ்த்து.

முன்பு சென்னை மயிலைச் சேன்தோம் கலாசாலைத் தலைமைத்
தமிழ்ப் பண்டிதராயிருந்து, தற்போது புதுவை
வாசியாகிய தில்லையம்பூர்-சோமயாஜி ஸ்ரீமத்

உப-வேங்கடராம ஐயங்காரவர்கள் கூறியது.

அறுசீர் விருத்தம்.

தமிழ்மணக்கிற் றரைமணக்குந் தகுமன்பி னருள்மணக்கும்
மணக்கு ஞானம்
அமிழ்தநிலை யதுமணக்கு மானந்த சுகமணக்கு
மணக்கும் பத்திக்
குமிழ்நயனத் துளிமணக்குந் தமிழ்மகவின் உடலெங்கும்
தமிழ்ம ணக்கும்
தமிழ்த்தெய்வ அருள்மணக்குந் தயைமணக்கும் புதுவைநலம்
மணக்குந் தானே. (௧)

கல்வியறி வொழுக்கங்கள் காசினியிற் கலந்திடினே
கலக்கு நன்மை
தொல்புவியின் மார்க்கமிது தூமனத்தர் கண்டதிது
சூக்க மாகும்
கல்விமிகு மிச்சங்கம் புத்தகமார் சாலையொன்று
கலத்தல் சீரே
நல்லறத்தின் முயல்மாந்தர் பலர்மேவி யதற்குதவி
நலஞ்செய் வோரே. (௨)

புருடார்த்தங் களின்மூன்றும் புவிப்பலனும் பொன்னுலகம்
புகும வர்க்கே
மருளார்த்த கதிநீங்க மறநீங்கி யறமார்க்கம்
மனிதர்க் குள்ளாற்
பொருளாக்குந் தவத்தோர்க்கும் புதுவையிதிற் றமிழ்மகவைப்
போற்றல் தானும்
அருளாக்கு நெறியாகும் அவர்பெருமை யாங்கூற
அரிய தொன்றே. (௩)

திருமுடிசெட்டியார்
7-வீடு பிர்ம்மாலயம்
4-2-18. புதுவை.

இங்ஙனம்:
தி. வே.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க. } பிங்கள ௵ மாசி ௴ 1918-ம் ௵ பிப்ரவரி ௴ { மதி — ரு.

பாரி.

பாரி கடையெழு வள்ளல்களில் ஒருவன். குறு நில மன்னன். கொடை மடத்தால் மிக்குயர்ந்தவன். இதனைச் சைவ நெறித் தொண்டராகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனார் தமது தேவாரத்தில், "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினும் கொடுப்பாரிலை" என விதந்து, சிவபெருமானையன்றி மற்றையோரைப் பாடியறியாத தமது திருவாக்கினால் புகழ்ந்தனரென்றால் வேறு கூறுவானேன்? இம்மட்டோ! சங்க நூல்களிலும் "மாரிவண்பாரி" (பதிற்றுப்பத்து. 71) "பாரியொருவனுமல்லன் – மாரியு முண்டீண் டுலகு புரப்பதுவே" (புறம் 107) "முந்நூறூர்த்தே தண்பறம்பு நன்னாடு முந்நூறூரும் பரிசிலர் பெற்றனர்." (புறம் 110) "வரைபுரைகளிற்றொடு நன்கலனீயும் – உரைசால் வண்புகழ்ப்பாரி" (அகம் 303) எனப் புகழ்ந்து கூறுவனவற்றால் இவனது வள்ளன்மை தெள்ளிதின் உணரத்தக்கதாம். இவனது நாடு, பாண்டி நாட்டகத்துள்ள "பறம்பு" என்னும் பெயருடையது. இதனைப் பறம்பு நாடு, பறநாடு எனவும் வழங்கப்படும். 'பாரி பறநாட்டுப் பெண்டிரடி' 'பறநாட்டுப் பெருங்கொற்றனார்.' என வழங்குவதால் அறியப்படும். முந்நூறூர்களையும், வளப்பம் மிகுதியையுங்கொண்ட பறம்பு மலையை

நாட்டின்பெயரே கொண்டு பறம்பு என்றே வழங்கினர். பாரிவள்ளல் இம்மலையின்மீது பகைவர் சேராதபடி வலிய அரண் அமைத்து நெடியகாவல் செய்து தனது அரசிருக்கைக்குச் சிறந்தவிடமாகக் கொண்டிருந்தான். இது:—

"பொருசின மாறுப் புலிப்போத் துறையு
மருவரை கண்டாப்போ லஞ்சி — யொருவருஞ்
செல்லா மதிலகத்து வீற்றிருந்தான் றேர்வந்த
னெல்லார்க்கு மெல்லாங் கொடுத்து."

(தொல்காப்பியம் மேற்கோள்)

என்பதனுல் அறிக. இவன் ஒழுக்க நலமும், உயர் குணமும், கருணைச் செயலும், கல்விச் செல்வமும், ஈந்துவக்கும் எழிற் சிறப்பும் ஒருங்கே எய்தப்பெற்று உலகம் புகழும் வள்ளல் திலகனுக விளங்கினன். இந் நற்றவச் செல்வருக்குப் "பலர்புகழ் நல்லிசை-வாய்மொழிக் கபிலன்" (அகம் 78) எனப் புலவர்களால் புகழ்ந்தோதப் பெற்ற "கபிலர்" என்னும் புலவர் பெருமான் இன்னுயிர்த் தோழராக அமர்ந்தனர். பறம்பிற்கோமான் பாரியை உடனின்று விசேஷமாகச் சிறப்பித்துப் பாடியும், இறந்த பின் பாடியும், இவனது பிரிவாற்றுமைக்கு வருந்தி வடக்கிருந்து உயிர் நீத்தவரும் இக்கபிலர் என்னும் புலவர் திலகரேயென்றுல்; பாரியின்பால் இவருக்கிருந்த உண்மை அபிமானமும், உறுதிபெற்ற நட்பும் எத்தகைய மேம்பட்டதெனலாம்.

பாரிமன்னன், மிழலைக்கூற்றத்துள்ள நீடூர் என்னும் நகரத்திற்குத் தலைவனும், போர்த் தன்மையும், வள்ளன்மையும் மிக்குடைய "எவ்வி"யென்னும் வேளிர் தொல்குடித் தோன்றலாவன். இவ்வள்ளலின் தியாகத்தையும், வீரத்தையுமே ஔவையாரும், கபிலரும், புறத்திணை நன்னுகனும் புகழ்ந்து பாடினுராவர். இத்தகைய புலவர் பாடும் புகழ்ச்சி மிக்குடைய பாரியின் மாசற்ற நெஞ்சத்தையும், மன நிறைந்த கருணையையும், ஒப்பற்ற கொடையையும், ஒங்குபுகழ்க் கீர்த்தியையும் நம்மால் விரிக்குந்தரமோ? எனினும்; இச் செல்வரின் கருணை மிக்க கொடைச் செயல் ஒன்றைமட்டும் உதாரணத்திற்கு இதன் கீழ்க் குறிக்கின்றோம்.

ஒரு நாள் பாரி வனம்பார்க்கக் கருதிப் பொற்றேரேறிச் சென்றுகொண்டிருக்கையில், மெல்லிய தளிருடன் வெண்முகை யரும்பிப் படர்வதற்குக் கொழுகொம்பின்றிக் காற்றால் மோதப் பட்டுத் தளரும் ஓர் முல்லைக் கொடியைக் கண்டு அது தாங்குவோ ரின்றித் தளர்கின்றேன்; என்னைக் காத்தல் நின் கடன்; எனப் பல்லெலாந் தெரியக்காட்டிக்கீழே விழுந்து முறையிடுதல் போலத் தோற்றவே வள்ளல் மனமிகவிரங்கிப் பன்முறையும் பரிவோடு நோக்கிக் 'கவலையொழிக' எனத் தன் தேரை அதன் பக்கத்தே செலுத்தி நிறுத்திவிட்டுத் தன் மெல்லிய சீரடி சிவப்ப நடந்து சென்றனன் என்ப.

" பூத்தலை யறாஅப் புனை கொடிமுல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி" (புறம்-200)

" ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி" (புறம்-201)

— " சுரும்புண
நறுவீ யுறைக்கு நாக நெடுவழி
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பறம்பிற் கோமான் பாரி" (சிறுபா - அடி 87-91)

" முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
எல்லைநீர் ஞாலத் திசைவிளங்கத் — தொல்லை
இரவாம லீந்த இறைவர்போல்" (புற-வெண்பாமாலை)
முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்" (பழமொழி)

என வருவனவற்றால் இவை உண்மை என்பதை வலியுறுத்தற் குப் போதுமான ஆதாரமாகக் காணப்படுகின்றன.

இங்ஙனம் கொடைக்கோர் எல்லையாகவிளங்கிய அருளுரு வள்ளலைச் சேர சோழ பாண்டியரெனும் மூவேந்தரும் தம்மினும்

ஈதலில் மிக்கானென உலகம் ஒருங்கே புகழ்வதைக் கேட்கப் பொறுது அழுக்காறு கொண்டு அவனை வென்று அவன் செல்வ மனைத்தையும் கொள்ளைகொள்ளக் கருதி மூவரும் ஒருங்கு கூடிப் பாரியின் பறம்புமலையரண்மீது படையெடுத்துப் பலநாள் போர் புரிந்தும் வெல்லமாட்டாது வருந்திய காலையில் புலவர் பெருமானாகிய கபிலர், பாரியினது இயல்பைக் குறித்து மூவேந்தரிடத்தும் நீவிர் மூவரும் இன்னும் பல படை கூட்டி எத்தனை காலம் போர்புரியினும் பாரியையும், அவனது வலிய மலையரணையும் கைக்கொள்வது அரிதாகும். இவன்பால் பரிசிலராகச் செல்லின் பொன், பரி, கரி, தேர் முதலியவன்றி மற்றெது விரும்பினும் பெறுதல் எளிது எனப் பாரியின் புரவலர்க்கு அருமையும், இரவலர்க்கு எளிமையுமாகிய நிலையை அறிவுறுத்தினர். இது:—

"அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினும்"
"கடந்தடு தானை மூவிருங் கூடி
யுடன்றனிராயினும்பறம்புகொளற்கரிதே" (புற-110)

"மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினுந்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றாலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சிறியாழ் பண்ணி
... ...
வாடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே" (புறம்-109)

என வரும் செய்யுட்களாலும் தெளிவாம்.

பொய்யடிமையில்லாத புலவர் கூறியவாறு அவ்வேந்தர் மூவரும் பாரியைப் பகைத்து வெல்லமுடியாதென்றஞ்சிப் போர்க்களத்திருந்தபடி புறங்காட்டினர் என்ப.

"எந்துகோட் டியானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி"

என்பதனால் அவ்வேந்தர் மூவரையும் வென்றோட்டியமை நன்கு புலப்படும். பின்னர், வேந்தர் மூவரும், பாரியை வஞ்சனையால் கொல்ல நினைந்து இரவலர் கோலம் புனைந்து பாரிபாலடைந்து அவனது இனிய குணவமுதங்களைத் தமிழ் புனைந்து புகழ்ந்து பாடினர். அப் பாடல் கேட்ட இரவலர்க்கெளியனாகிய பாரி, மிக மகிழ்ந்து அருள் மேவும் உளத்தனாய் அவர்கட்குப் பட்டுடையும், பொன்னாபரணங்களும், பரியும் தேரும், கன்றுடன் யானைகளும் பிறவும் வெறுக்க நல்கினான். இத்தனையும் பெற்ற இரவலர் கோலம் புனைந்த அரசர்கள் மனமகிழ்வின்றி, குறைபடும் மனத்தராய் நிற்பதைக் கண்ட வள்ளல், இன்னும் யாது வேண்டுமென வினவியபோது அவர்கள் தங்களையே பரிசிலாகப் பெற விருப்பம் என்ன, பாரியும் அவர்கள் விருப்பத்திற்கிணங்கி,

—"அறம் பூண்டு
பாரியும் பரிசில ரிரப்பின்
வாரே னென்னா னவர்வரை யன்னே" (புறம்-108)

என்றவாறு அவர்கள் பக்கல் சேர்ந்து யான் இதோ நும் பரிசிலாயினேன்; என்னைக்கொண்டு சென்று உமது குறை தீர்ந்து இன்புற்று வாழ்ந்திருமின் என்றுரைத்து அவர்களுடன் சென்றான். அறத்தையும், அருளையும், கைவிட்டு, அழுக்காறும் உட்பகையும் கொண்டிருந்த அரசர் மூவரும், தமது சூழ்ச்சிக்கு மகிழ்ந்து கருணை மிகும் வள்ளலைக் கொலைஞர் வசம் கொடுத்துத் தமது எண்ணத்தை நிறைவேற்றிக்கொண்டனர்.

இங்ஙனம் புரவலர்க்கின்னானாய், இரவலர்க் கெளியனாய்ச் சிறந்த நல்லிசை வள்ளலாகிய வேள் பாரி மூவேந்தர் சதிச் செயலால் உயிர் இழந்தானெனினும், அவனது உண்மைப் புகழும், வள்ளன்மையும் குன்றாதோங்கி இன்றளவும் கற்றார் ஒவ்வொருவர் உள்ளத்தினும் பதிந்து ஈகையின் அரிய சிறப்பை எடுத்தியம்பும் தன்மையின் மிளிர்வது எத்தகைய மேம்பட்ட தென்னலாம். "மன்னுதல் வேண்டின் இசை நடுக" என்பதைச் செல்வர் கைக்கொள்வார்களாக.

சி. கு. நாராயணசாமிமுதலியார்,
கோயமுத்தூர்.

பத்துப்பாட்டு

(சச - ம் பக்கத் தொடர்ச்சி.)

ச - வது பெரும்பாணாற்றுப்படை:—இது ருoo - அடிகளையுடையது. பரிசில் பெறற்கெண்ணிய பாணனொருவனைப் பரிசில் பெற்ற ஓர் பாணன் தொண்டைமா னிளந்திரைய னிடத்தே ஆற்றுப்படுத்தியதாகப் பாடப்பட்டது. இளந் திரையனுவான் காஞ்சிப்பதியின்கண் இருந்த ஒரு அரசன்: நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாக கன்னியைப் புணர்ந்த காலத்து அவள் யான் பெற்ற புதல்வனை என் செய்வேனென்றபோது தொண்டைக் கொடியை அடையாளமாகக் கட்டிக் கடலிலே விட அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரச உரிமை எய்துவித்து நாடாட்சி கொடுப்பல் என்று சோழன் கூற அவளும் அங்ஙனமே வரவிட, திரை (அலை) அம் மகவைக் கரையிற் சேர்த்தலின் திரையன் எனவும், தொண்டைக் கொடியைக் கட்டி விடுத்தலால் தொண்டைமான் எனவும் பெயர் எய்தினன்.

இந் நூல் அத் தொண்டைமானது நாட்டிலுள்ள குறிஞ்சி முதலிய ஐந்திணைகளினியல்பையும், ஆங்காங்கு வாழ்வாருடைய தொழில் உணவு ஒப்புரவு முதலியவற்றையும், அத் திரையன் காஞ்சிநகரத்து வீற்றிருக்கும் சிறப்பையும், அவனது வள்ளன்மையையும் கூறும். இதிற் காஞ்சி நகரத்துள்ள திருவெஃகாவென்னுந் திருப்பதி கூறப்பட்டுளது. ரு-வது சிறுபாணாற்றுப்படையைவிட இப் பாட்டினடிகள் பல்கி வந்ததால் இது பெரும்பாணாற்றுப்படையெனப் பெயரிடப்பட்டது.

> " அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
> பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பரிதி
> ... ...
> செந்தீப் பேணிய முனிவர்வெண் கோட்டுக்
> களிறுதரு விறகின் வேட்கும்
> ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே "

என்பன இந் நூலின் முதலும் இறுதியுமாம்.

> " கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
> புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண!
> ... ...
> வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்
> டியாமவ ணின்றும் வருதும் ", எனவரும் இவை பரிசில்

பெற்ற பாணன் கூற்று.

"கைப்பொருள் கொள்ளுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம்
உருமு முரறு தாவுந் தப்ப
காட்டு மாவு முறுகண் செய்யா"

இவ்வடிகள் அவ்வரசனது ஆணைச் சிறப்புக் கூறியவாறு அறிக.

"முறைவேண் டுநர்க்குங் குறைவேண் டுநர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
... ...
உருப்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகி
... ...
புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்
வென்றி யல்லது வினையுடம் படினும்
ஒன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக!
மள்ளர் மள்ள! மறவர் மறவ!
செல்வர் செல்வ! செருமேம் படுந!
... ...
தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி
வந்தேன் பெரும! வாழிய நெடிதென
... ...
நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
அந்நிலை யணுகல் வேண்டி.........
ஆவி யன்ன வவிர்நூற் கலிங்கம்
இரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇ
... ...
அருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
... ...
ஆனா விருப்பிற் றானின் றூட்டி
ஆவேண் டிமிரா வழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
... ... பொன்னின்-
றொடையமை மாலை விறலியர் மலைய
... ...
வளைகண் டன்ன வாலுளைப் புரவி

துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி
அரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலைத்
தொன்னாத் தெவ்வ ருலைவிடத் தொழிந்த
விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ
அன்றே விடுக்கு மவன்பரிசில்" எனவரும் இவை தொண்டைமானிளந்திரையனைப் பாணன் ஏத்தி நிற்க, அவன் தரும் பரிசிலின் சிறப்புக் கூறியன.

இந் நூலின் திரண்ட கருத்து:

பொலிவழிந்த வடிவினையும், கற்ற கல்வியை வெறுத்துக் கூறுகின்ற வாயினையு முடைய பாண! குதிரையோடே யானைகளையும் வாரிக்கொண்டு யாம் அத் திரையனூரினின்று வருகின்றேம்; நீயிரும் அவனையடைவீராயின், நின்னுளஞ் சிறக்க; நின் அவலம் கெடுக; இரவல! அவ்வரசனிலையைக் கேள் அவன் ஆளும் நாட்டிற் கள்ளர் முதலாகிய கொடியோர் இன்று; அதுவேயன்றி இடியும் இடியாது; பாம்புகளும் கொல்லுதலைச் செய்யா; புலிமுதலியனவும் வருத்தம் செய்யா; (இவை அவன் ஆணை) ஆகலின், அக் காட்டின்கண் இளைத்தவிடத்தே இளைப்பாறி, ஆங்குள்ளோர் எங்களிடத்தே தங்கிப் போகவேண்டுமென விரும்பிக் கூறின் தங்கிச் செல்வாயாக. செல்லுங்கால் வழியிடத்துக் குறிஞ்சி முதலிய இடங்களில் வசிக்கும் பலராலும் இடப்படும் பல்லுணக்களும் உண்டு மகிழ்ந்து போமின்; இப்போழ்து கைவண்டோன்றலாய்ப் பொருது, ஆர்த்துப்பகைமேற் சேறலின்றி, நச்சிச் சென்றோர்க்கு இன்பந் தருவதாகிய விழவு மேம்பட்ட மூதூராகிய காஞ்சிப்பதியின்கண் இருக்கின்றனன் தொண்டைமான் இளந்திரையனென்பான்; பணிந்த மன்னர் செவ்விபார்க்கும் முற்றத்தினையுடைய பொன்றங்கு நெடு நகர்க்கண் மந்திரிமுதலிய சுற்றத்தோடே இருந்த அவ்வரசனைக் குறுகி, தொண்டையோர்மருகனே! மள்ள! மறவ! செல்வ! செருமேம்படுந! பெருமானே! நின்னைப் புகழ்ந்து வந்தேன் நீ நெடிது வாழ்க எனக் கூறி நின் கலைகளெல்லாந் தெரிவதற்குமுன், இருடிகள் களிறு (யானை) முறித்துக்கொண்டு வந்த விறகினால் வேள்வி செய்யும் விளக்கமுடையதும் அருவிகளையுடையதுமான மலையை ஆளும் உரிமையுடைய அத் திரையன், யாக்கையுஞ் செல்வமு முதலியன நிலை நில்லாத இவ்வுலகிடத்து நிலை பேறுடைய புகழைத்தான் பெறுதல் நன்றென்றாய்ந்து, அடிசில் முதலியவற்றைத் தானே நின்று மிக்க விருப்பினாலூட்டிப் பொற்றாமரையையும் பொன் மாலையையும் நல்கி, நான்கு குதிரைகள் பூட்டிய தேரும் பிற பரிசிலுந் தந்து விடுப்பான் என்க.

இவற்றில், இரவல! செல்மோ என ஒருமையும், நீயிரும் படர்குவி ராயின், எனப் பன்மையும் மயங்கி வந்தன. இதற்கு விதி "முன்னிலை சுட்டிய :வொருமைக் கிளவி - பன்மையொடு முடியினும் வரைநிலை யின்றே - ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்" (தொல்-சொல்-எச்ச - சுசு) இஃதென்க. (தொடரும்.)

பத்திராசிரியர்.

ஐகார வீற்றுவினைப்பகுதி.

ஐகாரவீற்று வினைப்பகுதிகளுள்ளே களை, தளை முதலிய சில வினைப்பகுதிகள் ஈறுகெட்டு நின்று சாரியையும் பெற்றுப் பலவகை விகுதிகளோடும் புணர்ந்து முடிதலுமுண்டு.

களை என்பது ஈறு கெட்டுக் கள் என நின்று துச்சாரியையும் பெற்று அல் என்னுந் தொழிற் பெயர் விகுதியுடன் கட்டல் எனப் புணர்ந்து முடியும். வினையெச்ச விகுதி முதலியவற்றோடு கட்டு, கட்ப, கடும், கட்ட, கட்கும், கட்டனர், கட்பவர் முதலியனவாப் புணர்ந்து முடியும். "கட்டுலாம்" "களைகட்பச்செல்" (தணிகைப்பு) "மைந்நீலங் கடு மடவார்" (சேதுபு) "கட்டபூங் காவி" (இரகுவமி) "களைகட்டனர்" (கந்தபு) "குவளை கட்பவர்." (சீவகசிந்தா)

தளை என்பதும் பெரும்பாலும் அம்முடிபினைப் பெறும். அது தட்டு, தட்ப, தட்பின், தட்கும், தட்டோர் முதலியன வாகப் புணர்ந்து வரும். "வான்றளை தட்டு" (யாப்பருங்கலக்காரிகை) "பாசந்தட்ப" (சீவக சிந்) "தட்பின்" (தொல்காப்,) "தட்கும்," "தட்டோர்" (புறநா)

இனை என்பதினின்று இன்னல், இன்னு, இன்னுங்கு முதலிய பெயர்களும், வளை என்பதினின்று வள்ளம் முதலியனவும் பிறக்கும்.

இங்ஙனம்,

அ - குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம், யாழ்ப்பாணம்.

கம்பர் சரித்திரம்.

(சஎ-ம் பக்கத் தொடர்ச்சி.)

சடையப்ப முதலியாருடைய தந்தையாகிய சங்கர முதலியா ரிடத்தில் ஒட்டக்கூத்தப் புலவர் சிறுவயதில் உதவித்தொழில் புரிந்து கொண்டிருந்தனர் என்ப. அதனை,

"புதுவைச் சடையன் பொருந்து சங்கரனுக்
குதவித் தொழில்புரி யொட்டக் கூத்தனைக்
கவிக்களிறுகைக்குங் கவிராக்கதனெனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி
வேறுமங் கலநாள் வியந்துகாங் கயன்மேல்
கூறுநா லாயிரக் கோவைகொண் டுயர்ந்தோன்"

என்பது வலியுறுத்துகின்றது. சடையப்ப முதலியார் சங்கர முதலியாருடைய புதல்வர் என்பதை,

"இரவு நற்பக லாகிலென்பக லிருளுறுவிர வாகிலென்
இரவி யெண்டிசை மாறிலென்கட லேழுமேறிலென் வற்றிலென்
மரபு தங்கிய முறைமை பேணிய மன்னர் போகிலெனுகிலென்
வளமை யின்புறு சோழமண்டல வாழ்க்கை காரணமாகவே"

"கருது செம்பொனினம்ப லத்திலொர் கடவுணின்று நடிக்குமே
காவிரித்திரு நதியிலேயொரு கருணைமாமுகி றுயிலுமே
தருவுயர்ந்திடு புதுவையம்பதி தங்குமன்னிய சேகரன்
சங்கரன்றருசடைய னென்றொரு தரும தேவதை வாழவே"

என்னுஞ் செய்யுளாலறிக. சடையப்ப முதலியார் சங்கரமுதலியாருடைய புதல்வரென்றதனாலும், ஒட்டக்கூத்தப் புலவர் சிறுவயதில் சங்கர முதலியாருக்கு உதவித்தொழில் புரிந்துகொண்டிருந்தன ரென்றதனாலும் அவர் புலமை யெய்தி விக்கிரமச் சோழனைப் பாடிய உலாவில் சடையப்ப முதலியாரைப்பற்றிப் புகழ்ந்திருக்கின்றனர் என்றதனாலும் அவ்விருவரும் ஒரு காலத்தவரென்பதும் விக்கிரமச் சோழன் காலத்தவரென்பதும் விளங்குதல் அறிக. விக்கிரமச்சோழன் அரசாண்ட காலம் சிலாசாசன ஆராய்ச்சியின்படி 1118 வருஷம் முதல் 1132 வருஷம் வரையினுமாம். இவ்வரசன் காலத்திற் கம்பரது பெயர் விளங்கியதாகத் தெரியவில்லை. இவனுக்குப் பின்வந்த இவனது மகன் இரண்டாங் குலோத்துங்கன் காலத்திலேதான் கம்பர் கவிச்சக்கரவர்த்தியாகிச்சிறந்து விளங்கினர். இவ்வரசனது ஆட்சிக்காலம் 1132 வருஷம் முதல் 1162 வருஷம் வரையினுமாகும். இவனுக்குப் பின் பட்ட மெய்திய சோழன் இரண்டாம் ராஜராஜனுவன். இவனது ஆட்சிக்காலம் 1162 வருஷம் முதல் 1200 வருஷம் வரையினுமாகும். இவனே நம், கம்பர்மீது பாணந்தைவிட்டு அவரால் வசைக்கவி பெற்றவன். இவற்றால் கம்பர் விக்கிரமச்சோழன் காலத்திற் சிறியவராயிருந்து இரண்டாங் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன் என்னும் இவ்விரு அரசர்கள்காலத்திற் சிறந்து

விளங்கினவர் என்பதும் இவர்களிற் பின்னவன் காலத்திலே கம்பர் பரமபத மடைந்தனர் என்பதும் நன்கு விளங்குதல் அறிக. இவற்றால் கம்பரது காலம் ஏறக்குறைய கி. பி. 1120 வருஷத்துக்குமேல் 1200 வருஷங்களுக்குள்ளாகவாகும் என்பது நன்கு விளங்குதல் அறிக.

(தொடரும்)

கோவிந்தராஜ முதலியார்,
பச்சையப்பன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர், சென்னை.

நாம் எதனை விரும்புவது?

(சஅ - ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, ஸ்த்ரீகளின் வாயிலாய் இச்சரீரத்திற்குச் சுகம் உண்டோ? என்பதைக் கவனித்திடுவோம். புசிக்கப்பட்ட நாநாவித பதார்த்தங்களின் இரசத்தினின்று விந்து உற்பத்தியாகிறது; ஜீவன் விந்துவுக்கு ஆதினமாய் இருக்கிறது; விந்துவின் இருப்பு, துக்கத்தைப் போக்குகின்றது; மனம் இரத்த மிகுதியாற் சஞ்சலப்பட்டாலும், இவ்விந்துவின் அருமையறிந்தவிடத்து அச்சஞ்சலம் நீங்குகிறது; அவ்விந்து மிகுந்தால் தேகத்திற்கு ரூபலாவண்யம் அதிகப்படுகிறது; அது குறையின் பிரேதம்போல் அமங்களமாகிறது; எவன் சரீரத்தினின்றும் விந்து நாசமடைவதில்லையோ? அவன் சரீரம் தளர்ச்சியடைகிறதில்லை. யோகிகள் விந்து சம்ரக்ஷணையாற் கேசரிஎன்னும் முத்திரையை அப்பியசித்துச் சிறந்த நிலைமையெய்தி, அஷ்டமாசித்திகளும் அடைந்திருக்கிறார்கள். உலகத்தில் மிகவும் உத்தமமாகக் காணப்படுகிற இவ்விந்து ஸ்த்ரீகளால் நாசஞ் செய்யப்படுகிறது. விந்து நாசமடைந்த சரீரங்கள் பலவகைப்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்டு இரசம் பிழிந்துவிட்ட கரும்பின் சக்கையைப்போல் எவ்வகைப்பட்ட நன்மைக்கும் உதவாமல் போவது எவர்க்கும் பிரத்தியக்ஷமே.

இதுபற்றியன்றோ? கீழ்வருமாறு பெரியோர் கூறியுள்ளார்.

"பெறுவ தென்னைகொல் சுக்கிலங் கவித்தலால் பெருந்தவ வலிகுன்றும்
உறுவ தவ்வள வோபினை நீவிரும் புடற்குமா னியதுண்டால்
அறிவி யாமறி யாமைதோய்ந் துடற்றின வதைச்சுக மெனநின்றாய்
செறிது நெஞ்சமே நமதுசிற் சுகமினிச் சிவனையா தரிப்பாயே."

இனி, விவேகியானவன் அத்தியந்தம் சரீரத்தை நாசப்படுத்து தற்கு ஏதுவாகிய பரஸ்திரீகமனத்தை முற்றும் ஒழித்து, கிரகத்தனேல், விதித்ததினத்தில் புத்திரோற்பத்தி நிமித்தம் அதனை விரும்புவான். எவன் ஸ்த்ரீகளின் சரீரத்தின் சொரூபத்தை உள்ளவாறு (பைம்மறி யாப்பார்க்கப் பருந்தார்க்குந் தகைமைத்து, என) உணர்வானே? அவன் எந்த நிமித்தத்தினாலும் ஸ்திரீகளைப் பரிசிக்க விரும்பான். ஆதலின், இத்தேகத்துக்கு ஸ்த்ரீகளின் வாயிலாய்ச் சுகம் எவ்வாற்றானும் இல்லை யென்றுணர்க.

இனிப் புத்திரனால் சுகமின்றோ? எனிற் கூறுதும்: மைந்தனில்லார்க்கு இல்லையென்ற வருத்தம் ஒன்றே. மக்களைப் பெற்றோர்க்குக் கருப்பத்துற்ற நாண்முதல் பெறுகின்றவரையில் பலவிதமான கவலையுண்டாகிறது; பெற்றபின் குழந்தையின் ஆயுள் முதலியவற்றைப்பற்றிய கவலையதிகமாகிறது; பின்னர் வியாதி முதலியன அம் மகவுக்கு வந்தால் அதுகண்டு கவலையுற்று வியபிசாரிகளைப்போலப் பலதெய்வங்களை வணங்குவதோடு மருந்து முதலியன தேடிக்கூடத் தகாத இழிசனரிடத்தும் கலந்து பழகுகின்றனர். அதன்பின் அறிவுடையனாகாவிடின் அப் பிள்ளையை வெறுக்கிறார்கள்; அம் மைந்தனுக்கு ஓர் மனைவி வரின் அவள் தமது மகனை வசப்படுத்திக்கொள்வதால் கவலையடைகின்றனர்; மைந்தனும் மனைவி வார்த்தையையே கேட்டு மாதா பிதாக்களை அலக்ஷியம் செய்து எதிர்த்துரைப்பானாயின் அவனைப் பெற்றோர்கள் அடையும் கஷ்டத்திற்கோர் அளவில்லை; இங்ஙனமின்றி அருமை பாராட்டிப் பெற்று வளர்க்கப்பட்ட மைந்தன் மரணமடைந்துவிட்டாலோ பெற்றோர் எய்தும் துன்பத்தை எவ்வாறுரைக்க முடியும்? பிறப்பு முதல் இறப்புவரையிற் பிள்ளைகளாற்றுன்பம் அதிகரிப்பதேயன்றி இன்பம் எள்ளளவுமில்லை. இது பற்றியன்றோ?

"மதலையைப் பெறுநாள் துன்பம் வளர்த்திடு நாளுந் துன்பம்
விதலைநோய் அடையில் துன்பம் வியன்பருவத்துந் துன்பம்
கதமுறு காலர் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இதமுறல் எந்நாள் சேயால் எற்றைக்குந் துன்ப மானல்"

என்று கூறியிருக்கின்றனர் கவிவல்லோர். இதுகாறும் நம்மால் விரும்பப்படும் தனம், ஸ்திரீ, புத்திரர் இவர்களாற் றுக்கமேயன்றிச் சுகஞ் சிறிதுமின்றென்று தெரிவிக்கப்பட்டது. இனி விரும்பத்தக்கன இவை என்பதை இயம்புவோம்.

(தொடரும்)

சோ - வேலாயுத முதலியார்.

புத்தக வரவு.

சந்தானரத்தினம் என்னும் நூல் ஒன்று கைவரப்பெற்றேம். இது, பிரும்மஸ்ரீ சதானந்தஸ்வாமிகள் அவர்கள் மலையாளபாஷையில் இயற்றியதை, பிரும்மஸ்ரீ T. K. இராமபத்ர சர்மா அவர்களால் தமிழில்மொழிபெயர்க்கப்பட்டது. உலகநன்மையையும்முன்னேற்றத்தையும் குறித்தெழுதப்பட்டது. நான்குபாகமுடையது. இதிற்கூறும் மந்திரம், தந்திரம், யந்திரம், ஔடதம் இவைகள் அனுபவத்துக்கும் பொருந்தியனவே. பல மேற்கோள்களமைந்தது. சந்தானம் (சந்ததி) உண்டாதலைக்குறித்து விளங்கக் கூறுவது. ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படித்து நன்மையடைதற் கேற்றதொரு புத்தகமே இது. இங்கு யாம் கூறியன இதற்கு உபசாரமன்று. ஆதலின், இப்புத்தகத்தின் பல நன்மைகளையும் வாங்கிப் படித்தவர்களே நன்குணர்வர். இதனை அன்பு கூர்ந்தனுப்பிய இதன் தமிழ்மொழி பெயர்ப்பாசிரிய ரவர்கட்கு நன்றி யறிந்த வந்தனம் செலுத்துதும். (பத்—ர்.)

இப்புத்தகம் கிடைக்குமிடம்:

பிரும்மஸ்ரீ T. K. இராமபத்ரசர்மா அவர்கள்,

காளையார்கோயில்.

பத்திரிகை வரவு.

வேலூரில் வெளியிடப்பெறும் "ஜனோபகாரி" எனும் இவ்வருஷம் மார்கழிமாதத்திய சஞ்சிகை வந்தது. கல்வி, விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலியவற்றைக்குறித்து வெளிவரும் இம்மாதாந்தப் பத்திரிகை ஜனங்களுக்கெல்லாம் உபகாரமாக இருப்பதிற் றடையில்லை. இதிலுள்ள வியாசங்களும் தக்கோர்களால் எழுதப்பட்டுள. இத்தகைய பத்திரிகையை நமக்கனுப்பிய அதன் அதிபரவர்கட்கு நங் "தமிழ் மகவு"ம் நன்றியறிவு மனுப்பக் கடன்பூண்டுளேம். (பத்—ர்.)

நமது மகவுக்கு விஷயதானம் புரிவோர், மததூஷணம், இராஜநிந்தை முதலியன இன்றித் தெள்ளிய வசனநடையில் தீர்ந்தாவிளுல் எழுதி அனுப்புதல் வேண்டும்.

மறுக்கப்பட்ட விஷயங்கள் திருப்பி அனுப்பப்பட மாட்டா. விஷயங்களை அறிய விரும்பியவர்கள் ரிப்ளைகார்டு எழுதினால் பதில் கிடைக்கும்.

காகித விலையேற்றத்தானும் பிறவற்றானும் "தமிழ் மகவு" பன்னிரண்டு பக்கங்களில் ஆரம்பிக்கப்பட்டது; ஆயினும், தமிழபிமானிகள் தங்கள் தங்களாற்கூடிய வரையில் சந்தாதாரர்களைச் சேர்த்து உதவி புரிவார்களானால், நம்மகவும் வளர்ச்சியுற்று வெளிவரத் தடையின்று. (பத்—ர்.)

கடிதங்கள்.

அன்புருவாய ஐய!

"தமிழ் மகவு" என்னுந் தனித்தமிழ்ச் செல்வியின் கனியினுஞ் சிறந்த பனிமொழிப் பண்புணர்ந்து யான் நனிமகிழ்வுற்றேன். இத்தகைய பத்திரிகைகள் நந்தாய்மொழியாகிய தமிழ் மொழியை விளக்கவும், பாரதமாதாவின் பாலர்கள் துலங்கவும் இன்றியமையாத் துணைபூண்டனவே! ஆகலின், பத்திரச்சிறுமியும் அதிபரவர்களும் முதல்வனருளாலே நிலைமிசை நீடூழிவாழ்க. சந்தாவென்னுஞ் சிற்றுணவீந்து நந் தமிழபிமானிகளும் தழைவுற யான் மிகவும் விழைகின்றனன். சுபம்.

இங்ஙனம்:

வ - மு - இரத்நேசுவரையர்

தமிழ்ப்பண்டிதர். ஹிந்துபாடசாலை

மாத்தளை, சிலோன்.

செந்தமிழ்க்கிறைவ!

இலங்குறு பொதியில் விலங்கல்வாழ் பெருந்தவத் தகத்தியன் புரந்தருள் மகத்துவமிகுத்த அமிழ்தினிற்சிறந்த தமிழெனு மடந்தை "மகவு" எனப்புதுவையிற் போந்து நம் உத்தமர்மடியிற் றவழ்ந்து மொழியுங் கனிவாய்மழலைக்கு மிக்குவந்தனம். இச்சுவைக்கேற்ப மற்றெச்சுவையினைக் கூறுதலொக்கு மென்ன நோக்கியகாலைத் தக்கதொன்றும் தகவிலதென்ன அறிந்தனம். மிக்க இஃது மேம்படு நிலையினை யெய்துவான் தேம்படுமிறைவனிதற்கருள்புரிந்திட இறைஞ்சுதும்.

தமிழ்ப்பூஷணம்,

வாசுதேவ்ராவ், கேய்க்வாட்.

(of Poona.)

---

௧0 - சந்தாதாரர்களைச் சேர்த்து முற்பண மனுப்பும்படி செய்பவர்கட்கு இனாமாகப் பத்திரிகை மாதந்தோறும் அனுப்பப்படும். மாதிரிப்பத்திரிகை வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

சந்தாதாரர்களாகச் சேரக்கருதுவோர் வி-பி-யில் அனுப்பும்படி செய்வதைவிட முற்பணம் அனுப்புதல் நன்றாகும். எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஐப்பசி மீ முதலாகவே சந்தாவின் கணக்கு வைத்துக்கொள்ளப்படும்.

☞ பல கடிதங்கள் எங்களிடம் நேரேவந்து சேராமல் தவறியன என்று தெரிகின்றன. யாவரும் இனி இவ்விலாசத்திற்கே எழுதுக. விலாசம்:— "புதுவைத் தமிழ்ச் சங்கம்" ஆபீஸ்

நெ. 48. ரங்கப்பிள்ளை வீதி

புதுவை.

புதுவை—சைகோன் சின்னையா பிரஸ்.